முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1433

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.09.2023,** வெள்ளிக்கிழமை

1. பரிபக்குவம் தந்தருளும்
பரமானந்த ஞான குருவே
துரிதகதி உலகோர்க்கு வினை நீங்கி
துன்பமில்லா வாழ்வு தரும் தவகுருவே
2. குரு அரங்கனே ஞான தேசிகனே
கூறிடுவேன் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சோபகிருது வேங்கை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 15 ம் நாள், 01.09.2023 வெள்ளிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனால் உலகமாற்றம்
தவதர்மத்தைக் கொண்டு இனிதே நடந்தேறும்
மண்ணுலகம் அரங்கன் சன்மார்க்கத்தால்
மகத்துவம் கூடி உலகோரிடை ஞானமாக
4. ஆகவே ஆற்றல்பட பரவி
அகிலத்தில் பெருமாற்றம் சடுதி காணும்
மாற்றத்தை தரும் மகா சக்தியாக
மண்ணுலகில் அரங்கன் இருப்பதாலே
5. ஆற்றல்பெருக உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
அரங்கன் திருவடி பற்றி வந்தால் போதும்
வருவோர்க்கு ஞான சித்தி உறுதிஉறுதி
வையகத்தில் உலகமாற்றம் சடுதி சடுதி
6. அற்புதம்பட உலகோர்க்கு ஞானம் அருளும்
அரங்கன் ஆறுமுகன் என் மகா சூட்சுமமாய் இருக்க
வரம்வேண்டி எனை நாடும் அன்பர்களும்
வணங்கி அரங்கன் திருவடி பற்ற

7. இணங்கி ஆறுமுகன் யான்
எல்லோர்க்கும் ஞானம் அருளி
இனிபிறவா பெரும்பேறு தந்து
காத்து அருள் புரிவேன்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–